உ

சிவமயம்



மலேசியாவில் பிறந்து மல்லாகம் சோழியக்கட்டையில் வளர்ந்து

பிரான்ஸில் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்து

17 ஜீலை 2000 அன்று

இறைபதமடைந்த

# அமரர் கிருஷ்ணர் சாம்பசிவமூர்த்தி

அவர்களின்


# நினைவிதழ்

16.08.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.கிருஷ்ணர் சாம்பசிவமூர்த்தி



| | |
|---|---|
| அன்னை மடியில் | : 28.01.1944 |
| ஆண்டவன் அடியில் | : 17.07.2000 |

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்லப் பெண்டீர் சதமல்லப் பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்லச் செல்வஞ் சதமல்லத் தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகப்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கிருஷ்ணர் சாம்பசிவமூர்த்தி
அவர்களின்

# வாழ்க்கைச் சரிதம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த பெரியதம்பி கிருஷ்ணர் அவர்கள் மல்லாகத்தைச் சேர்ந்த கந்தையா அவர்களின் புதல்வி தங்கம்மா அவர்களைத் திருமணம் புரிந்து மலேசியாவில் வாழ்ந்து வந்தார். இவர்களின் இல்லற வாழ்வின் பெரும்பயனாக பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களில் ஏழாவது குழந்தைக்கு சாம்பசிவமூர்த்தி எனப்பெயரிட்டு அழைத்தனர்.

இரண்டாம் உலகமகா யுத்தம் மூண்டதையடுத்து மூத்த புத்திரர்களான குலசிங்கம், குணசிங்கம் புஷ்பலிங்கம, இராஜதுரை ஆகியோரை இலங்கையிலிருந்த உறவினர்களிடம் அனுப்பி வைத்தனர். அவர்கள் நால்வரும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றுவரலாயினர். சிறிது காலத்தின் பின்னர் யுத்த நெருக்கடிகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கிருஷ்ணர்-தங்கம்மா தம்பதிகள் ஏனைய குழந்தைகளுடன் இலங்கை திரும்பி மல்லாகத்தில் வசிக்கலாகினர்.

பெற்றோருடன் இலங்கைக்கு வந்த சாம்பசிவமூர்த்தி ஏனைய சகோதரர்களுடன் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் சேர்ந்து கல்வி கற்றார்.க.பொ.த.சாதாரண தரம் வரை கல்விகற்ற பின் பூண்டுலோயாவில் எழுதுவினைஞராக ஐந்தாண்டுகள் கடமைபுரிந்தார். அங்கு பணிபுரியும்போது சக தொழிலாளர்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் தன்னாலான உதவிகளை செய்து அவர்களது பேரன்பைப் பெற்றிருந்தார்.

1979ம் ஆண்டில் சிங்கப்பூர் சென்று ஐந்தாண்டுகள் பணிபுரிந்தார். மற்றோருக்கு உதவ எப்போதும் முன்னிற்கும் அமரர் மூர்த்தி அங்கும் ஏனைய தொழிலாளர்களின் அன்புக்குரியவராக விளங்கினார்.

1985ம் ஆண்டிலிருந்து காலமாகும்வரை பாரீஸில் வசித்துவந்த அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பசிவமூர்த்தி இங்கும் ஏராளமான நண்பர்களைப் பெற்றிருந்தார்.

இவரது மூத்தசகோதரன் குலசிங்கம் தவமணிதேவியைக் கைப்பிடித்து சுபாசினி, சுபதாஸ்,சுதர்சினி எனும் புத்திரச் செல்வங்களைப் பெற்று மகிழ்வோடு கனடா வில் வாழ்ந்துவருகிறார். இரண்டாவது சகோதரன் குணசிங்கம் கமலாதேவியைத் திருமணம் முடித்து சிவநேசன், சிவரூபன், சிவதாஸன் எனும் புத்திரர்களைப் பெற்று இலங்கையில் மகிழ்வோடு வசிக்கின்றார்கள். மூன்றாவது சகோதரன் புஷ்பலிங்கம் இளம்வயதிலேயே காலமாகிவிட்டார்.

நான்காவது சகோதரர் இராஜதுரை, தங்கராணியைக் கரம்பற்றி பிரான்ஸில் வாழ்ந்துவருகிறார். இவர்களுக்கு துசிந்தா, சமிந்தா எனும் இரண்டு பெண்கள் உள்ளார்கள். மூத்தசகோதரி செல்வராணி, திருஞானசம்பந்தன் அவர்களை மணம்முடித்து சசிகலா, மேகலா, கோகிலா ஆகிய பெண்செல்வங்களைப் பெற்றெடுத்து, இலங்கை யில் மகிழ்வோடு வாழ்கிறார். இவரது கணவர் திருஞானசம்பந்தன் அண்மையில் கொழும்பில் காலமானார்.

இரண்டாவது சகோதரி பரமேஸ்வரி, கைலாசபிள்ளை அவர்களைக் கரம்பற்றி ஸ்ரீஜெகன் எனும் மகனோடு இலங்கையில் வாழ்ந்துவருகிறார். மூன்றாவது சகோதரி மீனாட்சிதேவி தனது கணவர் கந்தசாமியுடன் இலங்கையில் வசிக்கிறார். இவர்களுக்கு விக்கினேஸ்வரன், ஈஸ்வரன், விமல்ராஜா எனும் மூன்று ஆண்செல்வங்கள் உள்ளார்கள்.

இவரது இளையசகோதரர் காலஞ்சென்ற நவரட்ணராஜாவின் மனைவி சிவபூரணம் தன் மகள் தனுசாவுடன் இலங்கையில் வசிக்கின்றார். இளைய சகோதரி இராசேஸ்வரியின் கணவர் லோகராஜா காலமாகிவிட்டார். இவர் தனது மகன் மயூரனுடன் இலங்கையில் வசிக்கிறார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## தோத்திரப் பாடல்கள்

நீர்பரந் தநிமிர் புன்சடை
மேலோர் நிலாவெண் மதிசூட
ஏர்பரந் தவின வெள்வளை
சோரவென் னுள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந் தவுல கின்முத
லாகிய வோரூ ரிதுவென்னப்
போர்பரந் தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே.

விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ் சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவ
னடியிணையே பரவும்
நிருத்தகீத ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே.

காவினை யிட்டுங் குளம்பல
தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித்
தீரென றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத்
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்

\- திருஞானசம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள்வானே பண்ட
நங்கற் காயந்தானே பாவ நாசா
காரேறு முகினைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

\- திருநாவுக்கரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுல கிற்பிறந்து
நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல்
தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள
விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை யுத்தமனே

ஊழிதொ றூழிமுற்று
முயர்பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின்
சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்றமிழா
லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா
வஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

மருவார்கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார்விடைமேன் மாதோடு
மகிழ்ந்துபூதப் படைசூழத்
திருமால்பிரம னிந்திரற்குந்
தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப்
பெரியபெருமா னடிகளே.

- சுந்தரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிம் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்டவந் தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்து(ம்) மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமானான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பகா வேதங்கள்
ஐயா வேன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருள்வாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தைனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாய் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு உணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாய் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றானே உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ வென்றென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பாள் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த, அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பகத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமை கோன்
அடியோமுக்கருள் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## பெரிய புராணம்

வேத நெறிதழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க
பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுக
சீதவளவயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

அமரர் சாம்பசிவமூர்த்தி அவர்கள்
சுகவீனமுற்றிருந்த வேளையில்
அவரை ஆதரித்துப் பராமரித்த நண்பர்களுக்கும்
அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது
வருகைதந்து பல்வேறு உதவிகளையும் நல்கி
எமக்கு பேருதவியாக இருந்தோர்,
அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்,
ஆறுதல் வார்த்தைகள் சொல்லி
எமக்குப் பக்கத்துணையாக இருந்தோர் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த நன்றிகள்.

சகோதரர்கள்

**KRISHNAR RAJADURAI**
**13 SQUARE ALBERT CAMUS**
**7190 TRAPPES**
**FRANCE**
**Tel:+ 33 (0)1 34820465**

***Type set by: Ponni Graphics, 00 44 (0)20 8318 5012***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org